முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1027

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.07.2022, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த மாதவசியே
   பரமானந்த சதாசிவ சற்குருவே
   சீர்திருத்தம் செய்து இந்த கலியுகத்தை
   சித்திமிகு ஞான யுகமாக மாற்றவந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   வரமென சுபகிருது நள்ளி திங்கள்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 06 நாள், 22.07.2022 வெள்ளிக்கிழமை)
   வழங்குவேன் சுப்ரமணியப்பெருமான் யானும்
3. யானுமே அரங்கனுக்குள் இருந்து அற்புதத்தை
   உலகோர் நலம்பெறவும் வளம்பெறவும் அருளிவர
   ஞானவான் உண்மைவழிகள் ஏற்கும் மக்கள் அனைவருக்கும்
   ஞானசித்தி இந்த கலியில் உறுதிஉறுதி
4. உறுதி தந்து பிரணவ சித்திமிகு
   உயர்வான ஓங்காரக்குடிலை நோக்கி
   வருமுலகில் உலகோர் தொடர்ந்து வரவர
   வரமென ஞானத்தைப் பெற்று உலகமக்களெல்லாம்
5. மக்களெல்லாம் ஞானவான்களாகி
   மகான்கள் ஆட்சிக்கு வழிவகை செய்து
   ஆக்கமுடன் இந்த லோகம்
   ஆற்றல்மிக்க ஆறுமுகன் என் ஞான ஆட்சிக்கு தகுதியாகும்
6. ஆகவே அரங்கனைத் தொடர்ந்துவந்து
   அற்புதத்தை உலகோர் பெற்று வரமாக
   அரங்கன் தரும் தர்மத்தை வளர்த்து
   உலகமெங்கும் தர்மபலம் பெருக்க
7. பெருக்கவே அதன்வழியே ஞானம்
   பிசகின்றி உலகோர்க்கு சித்தியாகி
   முருகப்பெருமான் என் ஆளுமையும்
   முழுமைபெற்றவர்கள் பதவிக்கு வந்தும் அற்புதம் இந்த உலகம் அடையும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–